வழக்குகளுக்கு 3 மாத தண்டனை என்பது மிகக் குறைவான தாகும். இப்படி பொது மக்களுடைய சொத்தை மோசடி செய்பவர்களுக்கு இன்னும் கடுமையான தண்டனையைத்தான் வழக்கு மன்றம் வழங்கியிருக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று பொது மக்கள் நம்பி நகைகளை தருகின்றபோது அவர்களுக்கு அச்சம் ஏற்படாத அளவுக்கு இதற்குப் பாதுகாப்பு ஏற்பட வேண்டும். அந்த வகையிலேதான் இன்னும் என்னென்னவிதமான கட்டுப்பாடுகள், முறைகள் வகுக்க முடியுமோ அதை வகுத்து அந்த வைப்பை சரி படுத்த வேண்டும் என்ற அறிவுரைகள் எல்லா வங்கிகளுக்கும் வழங்கப்பட்டிருக்கின்றன. இது பெரும்பாலான இடங்களில் ஏற்படுவதில்லை. குறிப்பிட்ட சில இடங்களில் ஏற்படுகின்ற போது, அதைக் கண்டுபிடிப்பதற்கான சூழ்நிலை ஏற்படும்போது தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

(முற்பகல் 11-10)

(ஆ) வேதாரண்யம் பகுதியில் உப்பு விலை வீழ்ச்சியால் பாதிப்பு.

* திரு. மா. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, " தமிழ்நாட்டில் உப்பு உற்பத்தியில் இரண்டாவது இடத்தில் இருந்து வரும் தஞ்சை மாவட்டம், வேதாரண்யம் தாலுக்காவில் இருக்கும் கோடியக்காடு, வேதா ரண்யம், அகஸ்தியம்பள்ளி கிராமங்களில் திடீரென்று உப்பு விலை வீழ்ச்சி ஏற்பட்டதால், உப்பு உற்பத்தியாளர்கள் தங்கள் தொழிலை நிறுத்தப் போவதால் சுமார் இருபதாயிரம் தொழி லாளர்கள் வேலை வாய்ப்பை இழக்க நேரிடும் நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] 1987 ஏப்ரல் 9]

அறிக்கை.

தஞ்சை மாவட்டம் வேதாரண்யம் பகுதியில் உப்பு விலை கீழ்க்கண்ட காரணங்களினால் வீழ்ச்சி அடைந்துள்ளது.

(1) 1985 ஆம் ஆண்டில் இப்பகுதியில் 1,45,000 டன்கள் உப்பு உற்பத்தி செய்யப்பட்டது. ஆனால் 1986 ஆம் ஆண்டில் 2,36,000 டன்கள் உப்பு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இது 1985 ஆம் ஆண்டின் உற்பத்தியை விட 65 சதவீதம் அதிகமாகும்;

(2) இரயில்வே இலாகா உப்பை ஏற்றிச் செல்வதற்காக கட்டணத்தை 1—12—1986 முதல் அதிகப்படுத்தியுள்ளது. இதனால் வேதாரண்யத்திலுள்ள சிறு உற்பத்தியாளர்கள் அவதிப்படுகின்றனர்;

(3) இரயில்வேயின் உத்தரவின்படி ரேக் லோட்டில் (அதாவது ஒரே தடவையில் 45 வேகன்கள்) மூலமாக உப்பை எடுத்துச் செல்வதற்கு உப்பு உற்பத்தியாளர்களால் இயலாத நிலை. மேலும் சாலை வழியாக உப்பை நெடுந்தூரங்களுக்கு ஏற்றிச் செல்வதற்கு நெல் அறுவடை சமயங்களில் போதுமான லாரிகள் வாடகைக்கு கிடைக்கப் பெறாதது;

(4) மேலும், தூத்துக்குடியிலிருந்து 1983 ஆம் ஆண்டு 2,78,000 டன்கள் உப்பு ஏற்றுமதி செய்யப்பட்டது. இது 1986 ஆம் ஆண்டு, 42,000 டன்களாக குறைந்தது. இதனால் தூத்துக்குடியில் உற்பத்தி செய்யப்பட்ட உப்பு உள்ளூரிலேயே விற்கப்பட்டதால் உப்பின் விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது.

ஆனால் இப்பிரச்சனைகளைப் பற்றி அரசுக்கு இதுவரை எந்தவித கோரிக்கையும் வரவில்லை. எனினும், இதில் உள்ள உண்மை நிலையை அறியவும், மேற்கூறிய உப்புத் தொழிலாளர் பிரச்சினைகளை ஆய்வு செய்யவும் வேதாரண்யத்தில் உள்ள உப்பு உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் அப்பகுதியிலுள்ள இரயில்வே இலாகா அதிகாரிகள், நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளின் பிரதிநிதிகள் மற்றும் இது சம்பந்தமானவர்களையும் அழைத்து இப்பிரச்சினைப் பற்றி விவாதிக்க உடனே ஒரு கூட்டம் நடத்தும்படி தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். இந்தக் கூட்டத்தில்

ஆய்வு செய்வதன் மூலம் பெருமளவுக்கு வேதாரண்யம் பகுதியி லுள்ள உப்பு உற்பத்தியாளர்கள் கஷ்டங்கள் தீர்த்து வைக்கப் படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. மா. மீனாட்சிசுந்தரம்: தலைவர் அவர்களே, இப்போது விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அதிலே பல காரணங்கள் சொல்லியிருந்தாலும், அந்த உப்பை வெளி மாநிலங் களிலே ஏற்றுமதி செய்வதற்கு, நாகப்பட்டினம் துறைமுகம் மூலமாக, கப்பல் மூலமாக ஏற்றுமதி செய்வதற்கு அரசு ஏற் பாடு செய்யுமா? அத்துடன்,—ரசாயன உப்பு—மிகவும் பற்றாக் குறையாக நமது மாநிலத்திலே இருக்கிற காரணத்தால், ரசாயன உப்பைத் தயார் செய்ய, அந்தப் பகுதி உப்பு உற்பத்தியாளர் களை ஏதாவது ஊக்குவித்து, உப்பு உற்பத்தி செய்ய அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, ரசாயன உப்பு உற்பத்தியில் ஏற்கெனவே இருக்கிற உற்பத்தி யாளர்கள் ஆர்வம் காட்டி வருகிறார்கள். உற்பத்தியிலும் ஈடு பட்டு வருகிறார்கள். சென்ற ஆண்டு 2 இலட்சத்து 78 ஆயிரம் டன் ஏற்றுமதி செய்யப்பட்டது. இந்த ஆண்டு, அது 42 ஆயிரம் டன்னாக குறைந்து போய் விட்டது. அதற்குப் பல்வேறு காரணங்கள். லாரி கிடைக்காதது ஒரு காரணம். வெளியிலே அதிக உற்பத்தியானதன் காரணமாக, விலைச் சரிவு ஏற்பட்டு விட்டது. ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவர்களை அழைத்து, உப்பு உற்பத்தியாளர்களை எல்லாம் கூட்டி வைத்து, வேதா ரண்யம் பகுதியிலே ஏன் உப்பு வெளியிலே எடுத்துச் செல்லப் படவில்லை என்பதை ஆராயும்படி கேட்டுக்கொண்டிருக்கிறோம். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

(இ) கோயம்புத்தூரிலுள்ள வேளாண்மைப் பல்கலைக்கழக ஆசிரியர்களின் கோரிக்கைகள்.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கோயம்புத்தூரிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் பல காலம் வலியுறுத்தி வரும் பல்வேறு கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத தால் வேலைநிறுத்தம் செய்ய முற்பட்டிருப்பது குறித்தும்,